# நெஞ்சம் கசிந்துருகி நேரில் வருகின்றேன்

நெஞ்சம் கசிந்துருகி நேரில் வருகின்றேன்
தஞ்சம் என்றுனது தாளைப் பணிகின்றேன்
வஞ்சம் கொலை களவு வாழ்வில் மறைந்திடுமே
கெஞ்சி உன் அருளை கேட்டு வணங்குகின்றேன்

**1**
புல்லின் பனித்துளியும்
பூவின் நீர்த்துளியும்
பாடும் புள்ளினமும்
புவி வாழும் பல்லுயிரும்
கல்லில் நீர் திரளும் கனியின் நின்சுவையும்
கடவுள் நீ படைத்த வகை உணர்ந்தேன்

**2**
கருவில் நான் உதித்த காலம் தொடங்கி
என்னை கண்ணின் மணியெனவே
கனிவோடு காத்து வரும்
விண்ணின் பேரரசே என்னை உன்னிடமே
விரைந்து அர்ப்பணித்தேன்
விழைந்து ஏற்றருளே

**3**
பண்ணில் தமிழ் ஏந்தி
மனதில் உன்னை ஏந்தி
பரமன் உன் பணியில் என்னைப் பலியாக்கி
மண்ணும் விண்ணும் மானிட குலம்
அனைத்தும் தந்தை
உன் பெயரை வாழ்த்தி வணங்கிடுமே